பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 19 திங்கட்கிழமை 02.06.2025 கதிர் 205

## இனிது ரகசியம் அல்ல!

வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி சபைகளில் அதிக ஆசனங்களைக் கொண்ட தமிழ்க் கட்சி ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிப்பதாக தமிழ் அரசுக் கட்சி, ☞ 2

## பலத்த மழை, காற்றால் கொழும்பில் மரமுறிவுகள்

### 35 சம்பவங்கள் பதிவாகின

பலத்த மழை மற்றும் காற்றுடன் கூடிய வானிலையினால் கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மரங்கள், கிளைகள் முறிந்து வீழ்ந்த 35 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவற்றில் அதிகமானவை தனியார் இடங்களை அண்டிய பகுதிகளில் பதிவானதாக கொழும்பு மாநகரசபை தெரிவித்தது.

விஹாரமஹாதேவி பூங்காவில் மரம் முறிந்துவீழ்ந்த 10 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அபாயமிக்க மரங்களை அடையாளம் கண்டு அவற்றை அகற்றுவதற்காக 05 விசேட குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ☞ 2 கொழும்பு மாநகர சபை தெரிவித்தது.

## சிறுவர்கள் மத்தியில் காய்ச்சல் அதிகரிப்பு

### லேடி ரிட்ஜ்வே நிபுணர் எடுத்துரைப்பு

குழந்தைகளிடையே இன்ஃப்ளுவன்ஸா, சிக்கன்குனியா மற்றும் டெங்கு போன்ற நோய்கள் அதிகரித்து வருவதாகக் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மைய சீரற்ற வானிலை காரணமாக டெங்கு மற்றும் சிக்கன்குனியா நோய்கள் அதிகரித்து வருவதாக வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டுகிறார்.

அதன்படி, நுளம்புகள் பெருகும் இடங்களை அழிப்பதில் அனைவரும் கவனம் ☞ 2

# சைக்கிள் - சங்கு நடுவே நேற்றிரவு திடீர்ப் பேச்சு

## கொள்கைப் புரிந்துணர்வுக்கு வருவது பற்றி ஆராய்வு






அகில இலங்கை தமிழ் காங்கிரஸுடன் (சைக்கிள்) தமிழ் அரசுக் கட்சி (வீடு) உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி (சங்கு) நேற்றிரவு அவசர அவசரமாக காங்கிரஸைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது. கூட்டணியின் இணைத் தலைவர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சித்தார்த்தன் ஆகியோருக்கும் கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் ஆகியோருக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது குறித்து ஓர் இணக்கப்பாட்டுக்கு ☞ 2

## நிவாரணப் பணிகளில் கடற்படைக் குழுக்கள்

பலத்த மழை மற்றும் கடும் காற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு கடற்படையின் 120 குழுக்கள் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளன. ☞ 8

## 178 சபைகளில் தவிசாளர்கள் ஜூன் 17இன் பின்னர் தெரிவு

ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு பெரும்பான்மை இல்லாத உள்ளுராட்சி சபைகளுக்கான தவிசாளர்களை நியமிக்கும் அதிகாரம் உள்ளுராட்சி ஆணையாளருக்கு மாற்றப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நிறைவடைந்த உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் தனியொரு கட்சி பெரும்பான்மையைப் பெற்ற 161 உள்ளுராட்சி சபைகளுக்கான தலைவர்கள் நியமனம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அதற்கான வர்த்தமானி அறிவித்தல் ☞ 8

## நாட்டைவிட்டு வெளியேறுவோரை தடுக்க மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவோம்

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

இந்நாட்டைவிட்டு வெளியேறநினைக்கும் மக்கள் மத்தியில் முதலில் நாடு தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும். எமது ஆட்சிக்காலத்தில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பில், 'யாழ்ப்பாணம் முதலீடு மற்றும் வர்த்தக மன்றம் - 2025' தலைப்பிலான கலந்துரையாடல் அரியாலை 'ஜே' ஹொட்டலில் அண்மையில் நடைபெற்றது.

அமைச்சர் அங்கு தனது உரையில் தெரிவித்ததாவது:

வடக்கை மேம்படுத்துவதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார். சர்வதேச விமான நிலையமொன்று அமைக்கப்படவேண்டும் என ஜனாதிபதி கூறினார். இப்படி வடக்கு குறித்து பல வழிகளிலும் சிந்திக்கப்படுகின்றது.

எவ்வித பிரிவினையும் இன்றி அனைத்து மக்களுக்கும் சம உரிமை என்பதே எமது ஆளும்தரப்பின் நிலைப்பாடாகும்.

முதலீட்டாளர்கள் வடக்குக்கு வரவேண்டும். இங்குள்ள துறைகளில் முதலீடுகளை செய்யவேண்டும். இங்கு வந்துள்ள முதலீட்டாளர்களுக்கும் இந்த அழைப்பை விடுக்கின்றேன்.

புலம்பெயர் தமிழர்கள் இது தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்தவேண்டும். முதலீட்டாளர்கள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களுக்குரிய வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

தமிழ் மக்களின் இருப்பு பற்றி கவலைவெளியிடுகின்றனர். இங்குள்ளவர்கள் ☞ 2

## மீண்டும் முகக் கவசம் அணியவும் சுகாதாரத்துறையின் அறிவுறுத்து

பொதுமக்கள் மீண்டும் முகக்கவசம் அணிவதுடன் கொவிட்-19 பரவலின்போது பின்பற்றிய சுகாதார நடைமுறைகளை மீள பின்பற்றுவதன் மூலம் தற்போது பரவும் கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறலாம் என்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் நோயியல் நிபுணர் வைத்தியர் ☞ 2

## இன்று முதல் மழை குறையும்

### 7 ஆயிரம் பேர் இதுவரை பாதிப்பு

இன்று முதல் மழையுடனான வானிலை குறைவடையும் சாத்தியமுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் தொடர்ந்தும் இடியுடன்கூடிய மழை பெய்யக்கூடுமென திணைக்களம் தெரிவித்தது.

எவ்வாறாயினும் கடலுக்கு ☞ 2

## என்னைச் சிக்கவைப்பதற்கு ஆளும்தரப்பினர் முயற்சி

### தயாசிறி ஜெயசேகர தெரிவிப்பு

என்னை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கும், சிக்கவைப்பதற்கும் ஆளும்தரப்பு முயற்சிக்கிறது என்பதை நன்கு அறிவேன். அனைத்து சவால்களையும் வெற்றிக் கொள்ள தயாராகவுள்ளேன் என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விளையாட்டுத் துறை அமைச்சர் பிங்கிரிய விளையாட்டு மைதானம் தொடர்பில் தெரிந்தோ அல்லது தெரியாமலோ பல விடயங்களை குறிப்பிட்டுள்ளார். ஒன்று இவருக்கு விடயம் தெரிந்திருக்கவேண்டும் அல்லது பிறிதொருவர் எழுதிக் கொடுத்ததை மனனம் செய்து குறிப்பிட்டிருக்கவேண்டும்.

முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர்கள் பற்றி பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். ☞ 2

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விவகாரத்தில்

## ஆளும்தரப்புக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம்

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை நிதி அமைச்சின் கீழ் கொண்டுவரும் வகையில் ஆளும்தரப்பு சட்டமூலம் ஒன்றைத் தயாரித்து வர்த்தமானியில் வெளியிட்டிருக்கிறது. இது மக்கள் ஆணையை காட்டிக்கொடுக்கும் செயலாகும். இந்த சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி அலுவலகத்தில் நேற்று ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் வெளிப்படையாக அறிவித்தாலும், அதனை நம்ப முடியாது கடைசி நேரத்தில் இந்தக் கட்சிகள் ஒருவர் காலை ஒருவர் வாரமாட்டார்கள் என்பது எந்த விதத்திலும் நிச்சயமில்லை என்று நேற்றுத்தான் இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

அதற்கிடையில் நேற்றிரவே இந்தக் கால் வாருதலுக்கான பிள்ளையார் சுழியை ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணிபோட்டது. தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் வீட்டிற்குச் சென்று சுரேஸ் பிரேமச்சந்திரனும் சித்தார்த்தனும்பேச்சுநடத்தினர். இதையடுத்து இந்த இரு தரப்பினருக்கும் இடையில் இன்று ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்ற அளவில் செய்திகள் வெளியாகின. ஆனால்விவகாரம்அந்தளவிற்கு இல்லை என்றே தெரிகிறது.

ஜனநாயகக் கூட்டணி அவசரப்பட்டாலும் காங்கிரஸ் நிதானமாக அவர்களைத் தமது காலடியில் விழவைப்பதில் கவனமாகவே இருக்கிறது. கொள்கைக் கூட்டுத்தான் முதலில் முக்கியம், அதற்கு இணங்கினால் பின்னர் சபைகளைப்பற்றிப்பேசலாம்என்றுகாங்கிரஸ் தெளிவாகப் பின்வாங்கியது. தமது கூட்டின் எதிர்காலம் கருதி காங்கிரஸுடன் எப்படியாவது கூட்டுச் சேர்ந்து ஒரு சில சபைகளையாவது கைப்பற்றிவிடவேண்டும் என்று துடிக்கும் கூட்டணி, இப்போதைக்கு கொள்கைக் கூட்டிற்கும் இணக்கம் தெரிவித்தாலும் ஆச்சரியமில்லை. புரிந்துணர்வுஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கும் அது தயாராகவே இருக்கும். ஏனெனில் இதுவென்றும் அதற்குப் புதிதில்லை.

ஜனாதிபதித் தேர்தலின்போதும் இப்படித்தான் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்று இந்தக் கட்சிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்பவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டனர். பின்னர் அந்த ஒப்பந்தந்த காற்றில் பறக்கவிடப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தலுக்குள், பொதுக் கட்டமைப்பின் சம தரப்பான பொது அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோதும், அதன் ‘சங்கு‘ சின்னத்தையும் சுருட்டிக் கொண்டு வெளியேறியது. அப்படிப்பட்ட கட்சிகளுக்கு உள்ளாட்சி சபைகளைப் பிடிப்பதற்காக காங்கிரஸுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு அதன் பின்னர் அதைக் குப்பையில் கடாசுவது ஒன்றும் பெரிய விடயமல்லவே. காரியம் முடிந்த பின்னர் அண்ணன் என்னடா தம்பி என்னடா என்று சொல்லவேண்டியதுதானே!

கஜேந்திரகுமாரும் என்ன செய்யமுடியும் அவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்று கொஞ்ச நாளைக்கு அழுது திரிய முடியும், அதன் பின்னர் அவரும் தனது அரசியலைப் பார்க்கப் போய்விடவேண்டியதுதான்.

நேற்றையபேச்சின்போதுஇருதரப்பினரும் திட்டமிட்டு அரசமைப்பின் 13 பற்றி வாயே திறக்கவில்லை. ஏனெனில் 13 இருந்தே ஆகவேண்டும் என்று விடாப்பிடியாக இருப்பவர்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ளனர். அது வேண்டவே வேண்டாம்என்பதுகாங்கிரஸின்நிலைப்பாடு. மாகாண சபைத் தேர்தல் வரக்கூடும் என்கிற நிலை இருக்கின்றபோது இந்த விடயத்தை முதன்மைப்படுத்தி எதற்கு வில்லங்கம் என்று நினைத்தார்களோ என்னவோ நேற்று எவரும் 13 பற்றி வாயே திறக்கவில்லை. பதிலாக தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு நகலை ஏற்பதுதான் தமக்கிடையிலான கொள்கை முடிவு என்று முடித்துவிட்டார்கள்.

இப்படித் தங்கள் கட்சிகளின் நலன்களுக்காகவே, தமது இருப்புக்காகவே எல்லாப் பேச்சையும் நடத்திவிட்டு வெளியே வந்து, “தமிழ் மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு சகல முடிவுகளையும் எடுப்போம்‘‘ என்று வாய் கூசாமல் சொல்கிறார்கள். இவர்களையெல்லாம் பெத்தார்களா, செய்தார்களா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சைக்கிள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதற்கான பேச்சாக இது இருந்தாலும் காங்கிரஸ்வலியுறுத்திவரும்முதலில்கொள்கை உண்பாடு என்கிற விடயத்தினால், தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு நகலை தமிழர் பிரச்சினைக்கான அடிப்படைத்தீர்வாக ஜனநாயகக் கூட்டணி ஏற்றுக்கொள்வது குறித்தே நேற்றைய பேச்சு இடம்பெற்றதாக காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

பேச்சு சுமுகமாகவும் பயனுள்ள வகையிலும்இடம்பெற்றதாகவும்தொடர்ந்தும் இரு தரப்பினரும் பேச உள்ளனர் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரனும் சித்தார்த்தனும் தெரிவித்தனர்.

கொள்கை உடன்பாடு தொடர்பிலான தமது கருத்துக்களை ஜனநாயகக் கூட்டணியினருக்குத் தாம் எடுத்துச் சொல்லிவிட்டோம் என்றும் அது தொடர்பில் ஜனநாயகக் கூட்டணியினர் தமது பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் பேசிவிட்டு முடிவைத் தெரிவிப்பார்கள் என்று கூறிச் சென்றிருக்கிறார்கள் என்றும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

நாளையும் நாளை மறுதினமும்கூட இந்தப் பேச்சுக்கள் தொடரும் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். எனினும் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது குறித்து நேற்றைய சந்திப்பில் எதுவும் பேசப்படவில்லை என்று கஜேந்திரகுமார் தெரிவித்தார். அது பற்றியும் பேசப்பட்டதாக சுரேஸ் மற்றும் சித்தார்த்தன் தெரிவித்தனர்.

இருப்பினும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (சைக்கிள்) கட்சியும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் (சங்கும்) வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைப்பதற்கான கொள்கையுடன் உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன எனவும்

இரு தரப்புகளும் பெரும்பாலும் இந்தக் கொள்கையுடன் கூடிய உடன்பாட்டில் இன்று ஒப்பமிடக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன என்றும் நேற்றிரவு ஊடகங்கள் சிலவற்றில் செய்திகள் வெளியாகி இருந்தன.

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வெளிநாட்டில் இருந்து நேற்று இரவு கொழும்பு திரும்ப இருந்தார். அவர் வந்ததும் அவரது இணக்கத்தோடு இந்த உடன்பாடு இன்று கையெழுத்தாகும் என்றும் அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பேச்சில்ஈடுபட்ட இருதரப்புத்தலைவர்களும் இத்தகைய உடன்படிக்கை தொடர்பில் எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை. தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வு எந்த வகையில் அமையவேண்டும் அதை அடைவதற்கான அணுகுமுறை எப்படி அமையவேண்டும் என்பது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான பேச்சுத்தான் நடத்தப்பட்டதாக, சந்திப்பின் முடிவில் கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

## இன்று.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதை தவிர்க்குமாறு கடல்சார் ஊழியர்களுக்கும் மீனவர்களுக்கும் தொடர்ந்தும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் பெய்த கடும் காற்றுடனான பலத்த மழையால் 14 மாவட்டங்களைச் சேர்ந்த 7,236 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 03 தற்காலிக முகாம்களில் 147 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கேகாலை, புத்தளம், கண்டி, நுவரெலியா, பதுளை, யாழ்ப்பாணம், மன்னார், காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மழையினால்அனர்த்தங்கள்பதிவாகியுள்ளன. 1,917 வீடுகள் சேதமடைந்துள்ளன.

மழையுடனான வானிலையால் 06 நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்தது.

கண்டி, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய 05 மாவட்டங்களுக்கும் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

டெங்கு மற்றும் சிக்குன்கன்யா அறிகுறிகளைக் கொண்ட குழந்தைகள் வைத்தியசாலையில்அனுமதிக்கப்படுகின்றனர் எனவும், டெங்கு ஆபத்தானது என்றும், சிக்கன்குனியா ஏற்பட்ட பிறகு மக்கள் பல மாதங்களுக்கு மூட்டு வலியால் அவதிப்படுவார்கள் என்றும் வைத்திய நிபுணர் கூறினார்.

அத்துடன் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் முதியவர்கள் சிக்கன்குனியாவால் பாதிக்கப்பட்டால், அது தீவிரமாக இருக்கலாம் என்றும், இந்த நிலை கர்ப்பிணித் தாய்மார்களுக்குப்பிறக்கும்குழந்தையையும் பாதிக்கலாம் என்றும் வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய காலகட்டத்தில் இன்ஃப்ளுவன்ஸா நோய் நிலை அதிகரித்து வருவதாலும், இந்தநோய்குழந்தைகளிடையே வேகமாகப் பரவக்கூடும் என்பதாலும் பொதுமக்கள் கவனம் செலுத்தவேண்டும் என்றும் வைத்திய நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

## அமைப்பாளர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளுக்குசெல்வதால்தான்இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. எனவே, இலங்கை நம்பிக்கையான நாடுதான் என்ற நம்பிக்கையை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் வேதநாயகன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், இலங்கை கனடா வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜூட் ஜயமஹ தெரிவித்ததாவது,

ஆசிய நாடுகளில் இந்நாட்களில் தீவிரமாக பரவி வரும் கொவிட் -19 திரிபு இலங்கையிலும்கண்டறிந்துள்ளதாகமருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஜயமஹ விளக்கமளித்தார். அவர் தெரிவித்ததாவது:

ஓமிக்ரோன் வைரஸின் புதிய திரிபுகளான ஸிய் 7 மற்றும் யீய்றூ எனும் புதிய வைரஸ் வகைகள் நாட்டில் உள்ள சில நோயாளிகளிடையே கண்டறியப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு மருத்துவமனைகளில் இருந்து பெறப்பட்ட உயிரியல் மாதிரிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுமேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் பொதுமக்கள் இவ்வாறான கொவிட் -19 திரிபுகள் தொடர்பாக வீண அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதிக ஆபத்துள்ள பிரிவினர் என சுட்டிக்காட்டப்படும் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார், வயதானவர்கள் மற்றும் நாட்பட்ட நோயாளர்கள் நோய்குறித்து அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அத்தோடு இந்நாட்களில் சனநெரிசலான பகுதிகளில் அதிக நேரம் செலவழிக்க வேண்டாம். கொவிட்-19 வைரஸின் புதிய திரிபுகள் காலத்துக்கு ஏற்ப அவ்வப்போது பரவுகின்றன. இருப்பினும், இதனை சுகாதார அதிகாரிகள் தொடர்ச்சியாக கவனித்து வருவதால் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றார்.

இதற்கிடையில், காலி தேசிய வைத்தியசாலையில் அண்மையில் உயிரிழந்த ஒரு மாத பச்சிளம் குழந்தைக்கும் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுவது. குறித்து காலி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிடுகையில், உயிரிழந்தகுழந்தையின் உயிரியல்மாதிரிகொழும்புமருத்துவஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், அந்த வைரஸ் தற்போது ஆசியாவில் பரவி வரும் கொவிட்-19 திரிபு இல்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது என்றார்.

## என்னைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம். நாங்கள் உண்மையாகவும், நேர்மையாகவும்செயற்பட்டுள்ளோம். பிங்கிரிய விளையாட்டு மைதான நிர்மாணிப்புக்கான பணிகள் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. 2018 ஏப்ரல் மாதமளவில் விளையாட்டுத்துறை அமைச்சு பதவியில் இருந்து விலகி எதிர்க்கட்சியில் செயற்பட்டேன்.

அதுவரையானகாலப்பகுதியில்ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட மற்றும் மாகாண விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு விளையாட்டுத்துறை அமைச்சுக்கு 1000 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது. கடந்த ஆளும்தரப்புகள் மேற்கொண்ட அபிவிருத்தி கருத்திட்டங்களை இடைநிறுத்தவில்லை. முன்கொண்டு சென்றோம். இந்த நிதி தொகை மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் கருத்திட்ட செயன்முறைக்குஅமையபகிர்ந்தளிக்கப்பட்டது.

2015 முதல் 2018 வரையான காலப்பகுதியில் மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் 12 மைதானங்களின் நிர்மாண பணிகள் நிறைவுபெறும் நிலையில் காணப்பட்டன. 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் பிங்கிரிய விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு ஒருசதம் கூட நிதி ஒதுக்கப்படவில்லை. என்னுடனான அரசியல் முரண்பாடுகளினால் பிங்கிரிய விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படவி;லலை. பொதுஜன பெரமுன தலைமையிலான ஆளும்தரப்பு அரசியல் பழிவாங்கல்களுக்காக அபிவிருத்தி கருத்திட்டங்களை இடைநிறுத்தியது.

விளையாட்டுத்துறை அமைச்சர் தெரியாத விடயங்களை ஊடகங்கள் மத்தியில் குறிப்பிடுவதற்கு முன்னர் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாட வேண்டும். விலைமனுகோரல்பத்திரங்களைபரிசீலனை செய்ய வேண்டும்.ஆகவே விடயங்களை அறியாமல் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம்.

என்னைதிருடன்என்றுகுறிப்பிடஎவருக்கும் முடியாது. அரசஅதிகாரிகளுடன்ஒன்றிணைந்து முறையானவழிமுறைகளுக்குஅமைவாகவே செயற்பட்டுள்ளேன். எச்சந்தர்ப்பத்தில் தவறான தீர்மானத்தை எடுக்கவில்லை. என்னை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கும், சிக்கவைப்பதற்கும்ஆளும்தரப்புமுயற்சிக்கிறது என்பதை நன்கு அறிவேன். அனைத்து சவால்களையும் வெற்றிக் கொள்ள தயாராகவுள்ளேன். ஆளும் தரப்புக்கு நான் தலைவலியாக உள்ளதால் எவ்வழியிலாவது என்னை நெருக்கடிக்குள்ளாக்க ஆளும்தரப்பு முயற்சிக்கிறது என்றார்.

## ஆளும்தரப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்சார சபை திருத்தச் சட்டமூலம் வர்த்தமானி படுத்தப்பட்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில் மக்கள் அன்றாடவாழ்க்கைநிலையைகொண்டுசெல்ல முடியாமல் இருக்கும் நிலையில் மின்சார கட்டணத்தை நூற்றுக்கு 18.3 வீதத்தால் அதிகரிக்கமாறு ஆளும்தரப்பு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாகஆராய்ந்துமக்களின்நிலைமை தொடர்பாக கருத்திற்கொண்டு தீர்மானம் எடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் ஆணைக்குழுவே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவாகும்.

பொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழுஇதற்கு முன்னர் பிரஜைகளின் நலன்கருதி நாட்டின் சட்டத்துக்கு அமைய செயற்பட்டிருக்கிறது. ஆனால் பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு இருக்கும் அதிகாரத்தை நிதி அமைச்சருக்குபய்படுத்தமுடியுமானவகையில் மின்சாரசபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள தற்போது சட்டமூலம் தயாரித்திருக்கிறது. இது பிரஜைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதித்திட்டம் என்பதுடன் நுகர்வோர் வெற்றிகொண்ட உரிமையை இல்லாமலாக்கச்செய்யும் விடயமாகும்.

இந்த சட்டமூலத்தை ஆளும்தரப்பு சமர்ப்பிக்குமானால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குவினால் எந்த பயனும் இல்லை. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீஊனன ஆணைக்குழுவாக செயற்பட்டே மின்சாரசபை, மின்சாரசபை சமர்ப்பிக்கும் மின்சார கட்டணம் தொடர்பில் ஆராய்ந்தே மின்சாரகட்டணத்தைஅதிகரிப்பதாகுறைப்பதா என அவர்கள் தீர்மானிக்கின்றனர். மின் உற்பத்தி செலவுகளுக்கு அமைய மின் கட்டணம் இதற்கு முன்னர் குறைந்தும் இருக்கிறது அதிகரித்தும் இருக்கிறது.

ஆனால் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதாக வாக்குதியளித்த ஆளும்தரப்பு தற்போது அதிகாரத்துக்கு வந்து 6 மாதங்களில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை குறைத்து சட்டமூலம் ஒன்றை தயாரித்துவர்த்தமானியில்வெளியிட்டிருக்கிறது. இது மக்கள் ஆணையை காட்டிக்கொடுக்கும் செயலாகும். இந்த சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்ய இருக்கிறோம். அதேபோன்று இந்த சட்டமூலத்தினால் அரசியல் அமைப்பை மீறும் செயற்பாடுகள்

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

# பிரபல ஐஸ் போதைப் பொருள் வியாபாரி விசேட அதிரடிப் படையினரினால் கைது

(தில்சாத் பர்வீஸ்)

நீண்ட நாள்களாக மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து ஐஸ் போதைப் பொருளை விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர். அத்தோடு விற்பனைக்காக இருந்த ஐஸ் போதைப் பொருளையும் கல்முனை விசேட அதிரடிப் படையினர மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இரவு வேளையில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு பிரபல பாடசாலை பின் பகுதியில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கல்முனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் மற்றும் பரிசோதனை நடவடிக்கையின் போது 39 வயதுடைய சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 3 கிராம் 510 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான குழுவினர் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மற்றும் கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்.மாவட்டத்தில் சில சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி மலரும்

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது புலம்பெயர்வாழ் இலங்கையர்களுக்கு நம்பிக்கை உள்ளது. எனவே, சில தீய சக்திகளால் பரப்படும் கதைகளை அவர்கள் நம்பமாட்டார்கள் - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்குத் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் உறுதியுரையேற்பு நிகழ்வு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

'இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய அகதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து இந்தியாவில் இருந்து வருபவர்களை அநுர அரசாங்கம் கைது செய்கின்றது என சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். அவரை அரசாங்கம் கைது செய்யவில்லை. இது விடயத்தில் உடனடியாக தலையிடப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த நபருக்கு பிணை வழங்கப்பட வேண்டும் எனவும், பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்ககூடாது எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஆட்சிகாலத்தில் இந்நாடு கட்டியெழுப்படாவிட்டால் இலங்கைக்கு விமோசனம் கிடையாது என்பதே புலம்பெயர் தமிழர்களின் கருத்தாக உள்ளது.

தீய குணம் படைத்த - தீய நோக்கத்துடன் செயற்படும் அரசியல் சக்திகள் உள்ளன. அந்த தீய சக்திகளை சுத்தப்படுத்த வேண்டும். அதனை நாம் செய்ய வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் சிறப்பாக செயற்பட வேண்டும். யாழ்.மாவட்டத்தில் சில சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும். அதேவேளை, மேலும் சில சபைகளில் எதிர்க்கட்சி தலைவராகக்கூட சிறப்பாக செயற்பட முடியும். - என்றார்.

# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவு ஒன்று திறக்கப்பட்டது

(கேதீஸ்)

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவு ஒன்றை திறப்பதற்கு நீர்த்தேக்க பொறியியலாளர்கள் நேற்று முன் தினம் இரவு நடவடிக்கை எடுத்தனர்.

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீரேந்தும் பகுதிகளில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக நீர்த்தேக்கத்தின் ஐந்து வான்கதவுகளில் ஒன்று நேற்று முன்தினம் இரவு திறக்கப்பட்டது.



மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவு ஒன்று திறக்கப்பட்டுள்ளமையால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் கீழ் பகுதியில் கொத்மலை ஓயாவை அண்மித்து வாழும் குடியிருப்பாளர்களை மிக அவதானமாக இருக்குமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சேவை நலன் பாராட்டு

(அஷ்ரப்கான்)

கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலில் கடந்த 15 வருட காலமாக சேவையாற்றிய இரு முஅத்தின்களின் சேவை நலன் பாராட்டு விழா வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையின் பின்னர் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

பள்ளிவாசல் தலைவர் ஏ.எம்.இப்றாஹீம் தலைமையில் இடம்பெற்ற இச்சேவை நலன் பாராட்டு விழாவில், முஹைதீன் பிச்சை ஷேக் அப்துல் காதர் (முஅத்தின்) மற்றும் அலியார் உதுமாலெப்பை (முஅத்தின்) ஆகியோர் நினைவுச்சின்னம், நன்கொடைப் பணம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களது அர்ப்பணிப்புமிக்க சேவையை கௌரவித்து இந்நினைவுச் சின்னம் வழங்கி வைக்கும் நிகழ்வில், பேருவளையைச் சேர்ந்த மௌலவி அஷ்ஷெய்க் ஆர். நில்பத் (அப்பாஸி) கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

இங்கு கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி ஸாபித் (ஸரயி,றியாதி) உட்பட பள்ளிவாசல் நிர்வாகசபை உறுப்பினர்கள், தஃவா குழு உறுப்பினர்கள், ஊர் ஜமாஅத்தார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருக்கோவில் பிரதேசசபையின் தவிசாளராக சசிகுமார் தெரிவு

## வர்த்தமானி பிரகடனம்

(சகாதேவராஜா )



திருக்கோவில் பிரதேச சபையின் புதிய தவிசாளராக சுயேச்சை அணித் தலைவர் பிரபல தொழிலதிபர் சுந்தரலிங்கம் சசிகுமார் நியமிக்கப்பட்டு வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட்டுள்ளார்.

உதவி தவிசாளராக தங்கராசா வரதராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் போட்டியின்றி அறுதிப் பெரும்பான்மையுடன் தெரிவான ஒரேயொரு தவிசாளர் திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் ஆவார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தனியொரு சுயேச்சை அணி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது திருக்கோவில் பிரதேச சபையில் மாத்திரமே என்பது இவ்வண் குறிப்பிடத்தக்கது.

திருக்கோவில் பிரதேச சபைத் தேர்தலில் சுயேட்சைக்குழு ஒன்றின் அணித் தலைவர் பிரபல தொழிலதிபர் சுந்தரலிங்கம் சசிகுமார் தலைமையிலான சுயேச்சை குழு வரலாறு காணாத வெற்றியை பதிவு செய்திருந்தது.

மொத்தம் 10 வட்டாரங்களில் 08 வட்டாரங்களில் சுயேச்சை குழு அமோக வெற்றியை ஈட்டியிருந்தது.

வரலாற்றில் முதல் முறையாக திருக்கோவில் பிரதேச சபை சுயேச்சை அணி வசமாகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

திருக்கோவில் பிரதேச சபையில் சுயேச்சை அணி ஒன்று 08 ஆசனங்களையும் இலங்கை தமிழரசுக் கட்சி 06 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி மற்றும் சுயேச்சை அணி தலாஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தமை தெரிந்ததே..

16 ஆசனங்களில் 50 வீதமான 08 ஆசனங்களை சசிகுமார் தலைமையிலான சுயேச்சை அணி பெற்றிருந்தது.

எனவே அங்கு சுயேச்சை அணித் தலைவரான பிரபல தொழிலதிபரும், கல்முனை ரோட்டரி கழக முன்னாள் தலைவருமான சுந்தரலிங்கம் சசிகுமார் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஆளும்தரப்பின் முயற்சி கண்டிக்கப்படவேண்டியது

இலங்கையின் மக்களுக்கு நேரடியாகத் தொடர்புடையமைக்கின்ற பல்வேறு சேவைகள் ' மின்சாரம், நீர்வழங்கல், எரிவாயு, தொலைத் தொடர்பு, போக்குவரத்து கட்டணங்கள்' ஆகியவற்றின் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை செய்யும் பொறுப்புடன் இயங்கிவந்தது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL). இக்குழுவின் சுதந்திரத்தன்மை, அதன் செயற்பாடுகளின்நம்பகத்தன்மைமற்றும்பொதுமக்களின் நலனை பாதுகாக்கும் ஒரே உத்தியாக கருதப்பட்டுள்ளது.

அந்த வகையில், தற்போது நிதி அமைச்சின் கீழ் இந்த ஆணைக்குழுவின் அதிகாரங்களைக் கொண்டு வருவதற்கான சட்டத் திருத்தமொன்று வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது மக்கள் மத்தியில் ஒரு மிகுந்த கவலையையும், ஆட்சி மேலாண்மையின் திசையைப் பற்றிய பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இன்றைய அரசியல் சூழலில் பொதுப் பயன்பாடுகள் தொடர்பான கட்டண நிர்ணயம் ஓர் அரசியல் கருவியாகவே சில நேரங்களில் மாற்றப்படுகிறது. தேர்தல் காலங்களில் கட்டணங்களை உறைவாக வைக்கவும், பின்னர் அதனை பெரிதும் உயர்த்துவதற்கும் கடந்த ஆண்டுகளில் எடுத்துக்காட்டு நிறைய உள்ளது. இதற்கிடையில்ஆணைக்குழுஒருகட்டுப்பாட்டுநிறுவனமாக நடுநிலையுடன் செயற்படுவதை வலியுறுத்தி, பல தடவைகள் மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து தீர்வு காண முயற்சி செய்துள்ளது.

ஆணைக்குழுவின் அதிகாரங்கள் இப்போது நிதி அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுவதால், அதன் நிர்வாக சுதந்திரம்கேள்விக்குறியாகிறது. நிதிஅமைச்சே, நாட்டின் வரவு செலவுகளின் அரசியல் தீர்மானங்களை வகுக்கும் அதிகாரம். அதேசமயம், பொதுப் பயன்பாடுகளின் கட்டணங்களை அரசியல் நோக்கங்களில் இருந்து ஒதுக்கி, தகுந்த கணக்கீடுகளின் அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும் என்பதே ஆணைக்குழுவின் உரிமை மற்றும் பொறுப்பு.

சட்டத் திருத்தம் மூலமாக இதனை ஓர் அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது, முற்றிலும் தவறான தீர்வாகும். இது மக்கள் நலனுக்குப் பதிலாக அரசியல் இலாபங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஓர் உத்தியாக மாறிவிடும் அபாயம் உண்டு.

இதனை மேலும் ஆழமாக பார்க்கும் பொழுது, இந்த முயற்சியை அரசு நிர்வாகத்தில் நிலவும் மக்கள் விரோதப் போக்குகளின் தொடர்ச்சியாகவே பார்க்கவேண்டும். சுயாதீன நிறுவனங்கள் மூலமாக மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையை ஆளும்தரப்பு முற்றிலும் புறக்கணிக்கின்றது.

எனவே, நிதி அமைச்சின் கீழ் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களைக் கொண்டு வருவதை கண்டிக்கவேண்டும். இது மக்களின் உரிமைகளை வெகுவாக பாதிக்கக்கூடியது. இதற்குப் பதிலாக, ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அதிகாரங்களையும், நிர்வாக சுதந்திரத்தையும் வலுப்படுத்தும்நடவடிக்கைகள்தான்ஆளும்தரப்பிமிருந்து எதிர்பார்க்கப்படும் பொறுப்புள்ள செயல்களாக இருக்கின்றன.

இந்தத் திருத்தம், நாடாளுமன்றத்தில் சரியான விவாதமும், பொதுமக்கள் ஆலோசனைகளும் இல்லாமல் நிறைவேற்றப்படும் பட்சத்தில், மக்கள் நலனுக்கே எதிரான ஒரு நடவடிக்கையாக வரலாற்றில் பதிவாகும். எனவே அரசாங்கம் இந்த முயற்சியை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.



# இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதியும் தொழில்சார் பன்முக வளர்ச்சியும்:

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி 2023-24 நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவு 21,083 கோடியை (2.6 பில்லியன்) எட்டியுள்ளது.

இந்த காலகட்டத்தில் அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஆர்மீனியா ஆகிய நாடுகள் இந்திய ஆயுதங்களை அதிக அளவில் இறக்குமதி செய்தன.

ஆகாஷ் வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்புகள் மற்றும் பினாகா பல்ஏவுகணை ராக்கெட் அமைப்புகள் போன்ற ஆயுத அமைப்புகளுக்கான இந்தியாவின் மிகப்பெரிய வாடிக்கையாளராக ஆர்மீனியா மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு ஆண்டுகளில், ஆர்மீனியா பல்வேறு இராணுவ தயாரிப்புகளுக்காக இந்தியாவுடன் பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

ஏவுகணைகள், பீரங்கித் துப்பாக்கிகள், ராக்கெட் அமைப்புகள், ஆயுதங்களைக் கண்டறியும் ரேடார்கள், புல்லட்-ப்ரூஃப் உடைகள் மற்றும் இரவு நேரப் பார்வைக் கருவிகள் ஆகியவை இதில் அடங்கும்.

## அமெரிக்காவுக்கு பல பாகங்கள் ஏற்றுமதி

போயிங் மற்றும் லாக்ஹீட் மார்ட்டின் போன்ற முக்கிய நிறுவனங்களுடன், விமானம் மற்றும் ஹெலிகொப்டர்களுக்கான பிற பாகங்களை, இந்திய உற்பத்தியாளர்களிடமிருந்து அமெரிக்கா முக்கியமாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கிறது.

மறுபுறம், பிரான்ஸ் பாதுகாப்புத் துறைக்காக இந்தியாவிலிருந்து அதிக அளவு மென்பொருள் மற்றும் மின்னணு உபகரணங்களை இறக்குமதி செய்கிறது. இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி இப்போது உலகளவில் 100 நாடுகளுக்கு விரிவடைந்துள்ளது.

ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் பிரம்மோஸ் சூப்பர்சோனிக் க்ரூஸ் ஏவுகணைகள், டோர்னியர்-228 விமானங்கள், பீரங்கி துப்பாக்கிகள், ராடார்கள், ஆகாஷ் ஏவுகணைகள், பினாகா ராக்கெட்டுகள் மற்றும் கவச வாகனங்கள் ஆகியவை அடங்கும்.

இதற்கிடையே, ஆகாஷ் ஏவுகணை அமைப்பின் மேம்பட்ட வகைகளை இந்தியாவுடன் இணைந்து தயாரிப்பதில் பிரேசில் ஆர்வம் காட்டி வருகிறது.

## ஆத்மநிர்பர் பாரத் திட்டம்:

உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதி நாடாக இந்தியா 2019 முதல் 2024 வரை உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளராக இந்தியா இருந்தாலும், தனது ஆத்மநிர்பர் பாரத் முன்முயற்சியின்




கீழ், உள்நாட்டு பாதுகாப்பு தொழில்துறை தளத்தை விரிவுபடுத்துகிறது.

நாட்டின் பாதுகாப்பு-தொழில்துறை தளத்தில் இப்போது 430 உரிமம் பெற்ற நிறுவனங்கள் மற்றும் 16,000 எம்எஸ்எம், நிறுவனங்கள் உள்ளன. இதற்கிடையே, இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு உற்பத்தி 2023-24 இல் சாதனை அளவாக 1.2 லட்சம் கோடியை எட்டியது. 50,000 கோடி ஆயுத ஏற்றுமதி மூலம் 2028-29 இற்குள் இதை 3 லட்சம் கோடியாக உயர்த்த முடியும் என மத்திய அரசு நம்புகிறது.

இந்தியாவின் ஆத்மநிர்பர் பாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயுத அமைப்புகளின் இறக்குமதியை தடை செய்வதும், அதே சமயம் உலகளவில் ஆயுத ஏற்றுமதியை தீவிரமாக சந்தைப்படுத்துவதும் அடங்கும்.

## சி - 295 போர் விமானம் தயாரிப்பு:

குஜராத் டாடா ஆலையில் சி-295 போர் விமானங்கள்தயாரிப்பதன்மூலம்உள்நாட்டில் வேலைவாய்ப்பு பெருகுவதுடன், மேக் இன் இந்தியா திட்டத்திற்கு பலம் சேர்க்கும். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் சர்வதேச வான்வெளி போக்குவரத்து சந்தையில் இந்தியாவுக்கும் நிரந்தர இடம் கிடைக்கும்.

இராணுவ வீரர்கள் மற்றும் தளவாடங்களைக் கொண்டு செல்ல, மருத்துவ மீட்புப் பணிகளில் ஈடுபட என பல்வேறு பயன்பாடுகளை கொண்ட சி-295 விமானங்கள் முழுவதும் உள்நாட்டில் தயாரிப்பதற்கான முதல் தொழிற்சாலை நிறுவனமான டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட்டை( டிஏஎஸ்எல்) குஜராத்தின் வதோதரா நகரில் பிரதமர் மோடியும், ஸ்பெயின் அதிபர் பெட்ரோ சான்ஜெஷ் இணைந்து, திறந்து வைத்தனர்.

ஸ்பெயின்நாட்டின்ஏர்பஸ்நிறுவனத்துடன் இணைந்து இந்த தொழிற்சாலை தனது

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இந்தியாவின்............

4ம் பக்கத் தொடர்ச்சி..........

உற்பத்தியை உள்நாட்டில் துவங்க உள்ளது.

'மேட் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் உள்நாட்டில் சி295 போர் விமானங்கள் தயாரிப்பதால் இந்தியாவுக்கு கிடைக்கும் நன்மைகள் பலவாகும்.



## இந்திய பாதுகாப்பு அதிகரிப்பு

ஏர்பஸ் நிறுவனம் வடிவமைத்து தயாரிக்கும் இந்த விமானத்தால், படையினரை அழைத்து செல்லுதல், சரக்குகளை கையாளுதல், எரிபொருள் நிரப்புதல் பணிகள் எளிதாகும். கடலோர பாதுகாப்புக்கும் இவற்றை பயன்படுத்த முடியும்.

இந்த விமானமானது, தற்போது பயன்பாட்டில் உள்ள ரஷ்யாவின் அன்டோனோவ் ஏஎன்-32 மற்றும் எச்ஏஎல் நிறுவனத்தின் ஏவிரோ 748 விமானங்களுக்கு மாற்றாக பயன்படுத்துப்படும். இந்த விமானங்களை விட சி 295 விமானம் தொழில்நுட்ப ரீதியில் மேம்பட்டது.

இந்த விமானத்தை குறுகிய மற்றும் செப்பனிடப்படாத ஓடுதளங்களில் பயன்படுத்த முடியும். சீன எல்லையை ஒட்டிய பகுதிகள் மற்றும் சவாலான பகுதிகளில் பாதுகாப்பு பணிக்கு இவை உகந்ததாக இருக்கும்.

மணிக்கு 482 கி.மீ., வேகத்தில் 8 தொன் எடை அல்லது 71 வீரர்கள் அல்லது 48 பாராட்ரூப்பர்களுடன் இந்த விமானம் பறக்கும் திறன் கொண்டது.

## மேக் இன் இந்தியா திட்டம்:

பாதுகாப்பு துறையில் வெளிநாடுகளை சார்ந்திருப்பதைகுறைக்கவும்,உள்நாட்டுஉற்பத்தியை ஊக்கப்படுத்தவும் கொண்டு வரப்பட்ட



'மேக் இன் இந்தியா' மற்றும் 'தன்னிறைவு பாரதம்' திட்டத்தின் முக்கியமானதாக சி-295 தயாரிப்பு மாறி உள்ளது

சி-295திட்டத்தின்படி இந்தியாவில்56விமானங்கள் வாங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. அதில், முதல் 16 விமானங்கள் ஏர் பஸ் நிறுவனம் ஸ்பெயினில் உள்ள தொழிற்சாலையில் தயாரித்து பறக்கும் நிலையில் வழங்கும். எஞ்சிய 40 போர் விமானங்கள் வதோதராவில் உள்ள டாடா தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும்.

## சி-295 ராணுவ விமான சிறப்பம்சம்:

இன்றைய நிலைவரப்படி இந்தியாவிடம் 5 போர் விமானங்கள் வழங்கப்பட்டு உள்ளன. முதல் விமானம் 2023 செப்., மாதம் இந்தியாவிடம் வழங்கப்பட்டது.

தற்போது உள்நாட்டில் தயாரிக்கப்படும் விமானங்களில் முதல்விமானம் 2026 செப்ரெம்பருக்குள் தயாராகும். எஞ்சியவை 2031 ஓகஸ்ட் மாதத்திற்குள் நிறைவு பெறும்.

உள்நாட்டில் இந்த விமானங்கள் தயாரிக்கப் படுவதால், வேலைவாய்ப்பு அதிகரிப்பதுடன், பொருளாதாரத்திற்கு ஊக்கம் கிடைக்கும். நேரடியாக 3 ஆயிரம் பேருக்கும், மறைமுகமாக 15 ஆயிரம் பேருக்கும் வேலை கிடைக்கும்.

போர்விமானங்களுக்கு தேவைப்படும்கருவிகளை தயாரிக்கும் நிறுவனங்களும் வளர்ச்சி பெறும்.

இந்த விமானத்தின் உற்பத்தி மூலம் கிடைக்கும் வணிக மற்றும் நிதி ரீதியிலான பலன்கள் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க விளைவை தூண்டும்.

## இந்தியாவின் வான்வெளி கட்டமைப்பு பலம்:

சி-295 போர் விமானம் திட்டத்தின்படி, பயிற்சி மையம் அமைத்தல் மற்றும் பராமரிப்பு மையம் அமைப்பதும் அடங்கும். இந்த விமானத்தை இந்திய விமானப்படை வீரர்கள் இயக்கவும், பராமரிக்கவும் பயிற்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

பராமரிப்பு மையம் அமைப்பதுடன், உதிரி பாகங்களுக்கு தேவையான கருவிகளையும் ஏர் பஸ் நிறுவனம் அடங்கும். உ.பி., மாநிலம் ஆக்ராவில் பயிற்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

சி295 திட்டமானது, இந்தியாவின் உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்வது மட்டும் அல்லாது, எதிர்காலத்தில் ஏற்றுமதிக்கான வாய்ப்பையும் அதிகரிக்கிறது.

56 போர் விமானங்கள் தயாரித்து முடித்ததும், இந்தியாவிலேயே போர் விமானங்களை தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு பிறகு ஏர்பஸ் நிறுவனம் ஏற்றுமதி செய்யலாம்.

இது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் சர்வதேச வான்போக்குவரத்து சந்தையில் இந்தியாவுக்கு என ஒரு முக்கியமான இடத்தை உறுதி செய்யும் என பாதுகாப்பு படை நிபுணர்கள் கூறுகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# 26 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் சமர்செட் கார்லிபேக்கில் இடம்பெயர்வு

(கேதீஸ்)

நானுஓயா சமர்செட் லேங்டல் தோட்டத்தின் 28 லயன் குடியிருப்புக்களை கொண்ட குடியிருப்பு தொகுதி ஒன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் தற்காலிகமாக சமர்செட் கார்லிபேக் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.







இவர்களுக்கான உலர் உணவு பொருள்கள் அப்பகுதி கிராம உத்தியோகத்தர் புவனேந்திரன் தலைமையில்நுவரெலியாபிரதேசசெயலகத்தினூடாக வழங்கப்பட்டு வருகின்றன.



மேலும் லயன் குடியிருப்புக்களில் பாரியவெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதால் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரிகள் இன்று வருகைத் தந்து இதனை அறிக்கையிடவுள்ளதாக அப்பகுதி கிராம உத்தியோகத்தர் புவனேந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் இவர்களுக்கு தேவையான உதவிகள் தோட்ட அதிகாரி கோசல விஜேசேகரவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## எமனாக மாறிய 'செல்பி' 2 மாணவிகள் உயிரிழப்பு

முல்லைத்தீவு, குமுழமுனை, கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் ஆலயக் கேணியில் இன்று செல்பி எடுக்கச் சென்ற பாடசாலை மாணவிகள் இருவர், கேணிக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளனர்.

கேணிக்குள் தவறி வீழ்ந்த இரு மாணவிகளும் ஆபத்தான நிலையில் குமுழமுனை இளைஞர்களால் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில்சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

மேற்படி இருவரும் பூதன்வயல், மாமூலை பகுதியில் வசிக்கும் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவிகள் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். மாநகரிற்கு முதல் முஸ்லிம் பெண் பிரதிநிதி

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான முதல் முஸ்லிம் பெண் பிரதிநிதியாக பாத்திமா றிஸ்லா என்ற ஆசிரியை நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர சபைத் தேர்தலில் பட்டியல்வேட்பாளராகஇடம்பெற்ற சகோதரி பாத்திமா றிஸ்லா ஆசிரியை அவர்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி தமது நியமன உறுப்பினராக நியமித்துள்ளது. இந்த நியமனத்தை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## தம்பிராய் குளத்தில் இளைஞர் வாளால் வெட்டிக் கொலை

கிளிநொச்சி, பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிராய் குளத்தை அண்டிய பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர், இனந்தெரியாத வர்கள் மேற் கொண்ட வாள்வெட்டுத் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பூநகரி, செம்பங்குன்று பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய கந்தசாமி பிரணவன் எனும் இளைஞரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். சடலம் பிரேதபரிசோதனைக்காகக்கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 35 சபைகளில் அதிகாரத்தை எதிர்பார்க்கிறது தமிழ் அரசு

வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் 35 இற்கும் அதிகமான சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்பார்த்துள்ளது என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது குறித்து கருத்து வெளியிடும் போதே இதனைத் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 377ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் 35 சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு எதிர்பார்ப்புடன் உள்ளது.

அண்மைய நாட்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய தரப்புக்களுடன் நாம் நடத்திய பேச்சுகளின் அடிப்படையில் இந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற சபைகளில் அந்தந்தக் கட்சிகள் மேயர், தவிசாளர் பதவிகளுக்கான உறுப்பினர்களை முன்மொழியவுள்ளதோடு அவர்களுக்கான ஆதரவை மேற்படி கட்சிகள் வழங்குவது என்ற பொதுப்படையான இணக்கப்பாடு காணப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆட்சியமைப் பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்க ப்படவுள்ளன. இதேநேரம் சாவகச்சேரி நகர சபை உள்ளிட்ட சம ஆசனங்களைப்பெற்ற சபைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணக்கப்பாடு எட்டப்படாமையால் நாமும் உறுப்பினரைத் தவிசாளர் பதவிக்கு முன்மொழிவோம்.

அவ்வாறு முன்மொழியப்படும் உறுப்பினருக்குக் காணப்படும் ஆதரவின் அடிப்படையில் ஆட்சி அமைக்கப்படும் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு சிரமதான நிகழ்வு

## சுமந்திரன் வலியுறுத்து

(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறைபிரதேசசெயலகபிரிவுக்குட்பட்ட 51 கிராமசேவகர்பிரிவுகளிலும்ஒன்றிணைந்து எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி அனுஸ்டிக்கப்படவிருக்கும் உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு சிரமதான நிகழ்வுகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சம்மாந்துறையில் உள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கு ஏற்ப மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிகரமாக நிறைவடைந்து.

இந்நிகழ்வில் மேற்படி கிராம சேவை பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பாடசாலை சுற்றாடல் கழக மாணவர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# மழையினால் மரங்கள் முறிந்து பெரும் சேதம்

(கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் கடும் காற்றுடன் பெய்து வரும் நிலையில் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நானுஓயா வங்கிஓயா கீழ்பிரிவில் நேற்று முன்தினம் குடியிருப்பொன்றின் மீது மரம் ஒன்று வேரோடு சாய்ந்ததன் காரணமாக அக்குடியிருப்பு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.



மேலும் தலவாக்கலை கொரீன் தோட்டத்தில் 200 வருடம் பழைமை வாய்ந்த மரம் ஒன்று வோரோடு சாய்ந்து வீழ்ந்துள்ளது. தலவாக்கலை ஹொலிரூட் கீழ் பிரிவில் குடியிருப்பொன்றின் மீது கித்துள் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் குடியிருப்பு பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு குடியிருப்புக்குள் இருந்தவர்கள் தெய்வீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

மேலும் தலவாக்கலை ட்றூப் தோட்டத்தில் வீதியோரமாக காணப்பட்ட கருப்பந்தேயிலை மரங்கள் வேருடனும் முறிந்தும் வீழ்ந்துள்ளமையால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டதோடு மரங்களை வெட்டி வீதியை சீர்செய்யும் நடவடிக்கைகளில் தோட்ட நிர்வாகமும் பொதுமக்களும் ஈடுப்பட்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# கண்டாவளை பிரதேச செயலக இளைஞர் கழக உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல்

இளைஞர் கழகங்களை வலுப்படுத்தி இளைஞர் கழகங்கள் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக கண்டாவளை பிரதேச செயலக இளைஞர்கழகஉறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை பிரதியமைச்சர் எரங்க குணசேகர கலந்து கொண்டிருந்தார்.

பரந்தன்கிராம அலுவலகவளாகத்திலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

கண்டாவளை பிரதேச செயலக இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர். அந்தோணிமுத்து ஜெயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை பிரதியமைச்சர் எரங்க குணசேகர உள்ளிட்டோர் கலந்து இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

இலங்கையில்உள்ள அனைத்துயூத்கிலப்புகளுக்கும் விஜயம் செய்ய உள்ளதாகவும் அவர்களின் தேவைகள் அறிந்து தேவைக்கு ஏற்ற வகையில்தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் நாட்டில் சிங்களம் தமிழ் முஸ்லிம் என்று வேறுபாடு இல்லாமல்அனைவரும் அனைத்து மொழியிலும் சரளமாக உரையாடக் கூடிய வகையில்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும்

விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக பாறியளவில் நிதி வடக்கு கிழக்குக்கு ஒதுக்கப்பட உள்ளது.

அந்தநிதியினைவடக்குகிழக்கில்உள்ளயூத் கிளப்புகள் ஊடாகவே வழங்கப்பட உள்ளதாகவும் கடந்த 30 வருட யுத்தத்தில் இந்தப் பகுதி ரத்தத்தால் கண்ணீராலும் தோய்ந்து பகுதிகளாக காணப்பட்டது.

ஆனால்இனிவரும்காலங்கள்இப்படியான சம்பவங்களுக்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார். 316

### திருக்கோவிலில் சிறப்பாக நடைபெற்ற அகில இலங்கை

# தமிழ்த் தினப்போட்டியில் கண்கவர் கலை நிகழ்ச்சிகள்!

( சகாதேவராஜா)

அகில இலங்கை வலயமட்ட தமிழ்த்தினப்போட்டியானது அம்பாறை மாவட்டம் திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் மிக்சிறப்பாக கடந்த புதன்கிழமை இடம்பெற்றது

திருக்கோவில்வலயக்கல்விப்பணிப்பாளர் இரா .உதயகுமார் தலைமையில் தமிழ்மொழித்தினபண்பாட்டுஊர்வலத்துடன் ஆரம்பமாகிய இப் போட்டி நிகழ்வில்

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் உள்ளிட்ட அதிதிகள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

அங்கு கண்கவர் கலைநிகழ்ச்சிகள் மேடையேறின






# பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு



(சர்ஜுன் லாபீர்)

கிராமிய அபிவிருத்தி, சமூகபாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சும்,சம்மாந்துறை பிரதேச செயலகமும் இணைந்துசம்மாந்துறை செந்நெல்சாஹிறா மகா வித்தியாலயத்தில் தரம் 09,10,11 மாணவர்களுக்கு 'திரைக்கு அடிமையாதல் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாதல்' எனும் தலைப்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி சம்மாந்துறை பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் எம்.எப் பர்ஸானா தலைமையில் சம்மாந்துறை செந்நெல் சாஹிறா தொழில்நுட்ப கட்டடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இடம்பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வின் பாடசாலை அதிபர் அஷ்ஷேஹ் இஸ்மாயில், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாடு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் பி.எம்.றஸாட், உதவி அதிபர் ஏ.மஜீட் உளவளத்துணை உத்தியோகத்தர் கே .தயாளினி, சிறுவர்பாதுகாப்பு உத்தியோகத்தர் வி.விஜயதாஷ், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஐ.எம் கரீமா மற்றும் உளவளத்துணை ஆசிரியர் எட்.ஹபீனா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் திரைக்கு அடிமையாதல் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாதல் தொடர்பில் தெளிவூட்டினார்கள்.



## ஆளும்தரப்புக்கு....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளதா என தேடிப்பார்க்குமாறு தொழிற்சங்கங்கள் மற்றும் பல சிவில் அமைப்புகள் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றன. எனவே நுகர்வோரை பாதுகாத்துக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் போராடும் என்றார்

## நிவாரணப்....

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

கடற்படைப் பேச்சாளர் கெப்டன் புத்திக்க சம்பத் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக விமானப்படையின் 04 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதற்காக பெல் 412 ரக விமானமும் தயார்நிலையில் உள்ளது

இதனைவிடவும் அபாயகரமான பகுதிகளில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## 178 சபைகளில்....

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

வெளியிடப்பட்டது.

அதன்படி, மேற்படி உள்ளூராட்சி சபைகள் நாளை முதல் அடுத்த சில நாட்களில்கூடவுள்ளதாகபொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இருப்பினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 178 உள்ளூராட்சி சபைகளில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையைப் பெறாததால், அந்தநிறுவனங்களின் தலைவர்களை நியமிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உள்ளது.

அதன்படி, உள்ளூராட்சி சபைகளுக்கான மேயர்கள், பிரதி மேயர்கள், தவிசாளர்கள் மற்றும் உப தவிசாளர்கள் நியமிக்கப்படும் விதம் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் செய்தித்தாள் விளம்பரங்களை முதலில் வெளியிடவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிவிப்பு வெளியான 14 நாட்களுக்குப் பிறகு, சம்பந்தப்பட்ட சபைகளின் உறுப்பினர்கள்கூடி, தங்கள் தலைவர்களை நியமிக்கவேண்டும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான மேயர்கள், பிரதி மேயர்கள், தலைவர்கள் மற்றும் உப தலைவர்களுக்கான நியமனம் ஜூன் 17 இன் பின்னர் இடம்பெறும்.

நியமனங்கள் வழங்கப்படும் திகதிகள் குறித்து உள்ளூராட்சி ஆணையாளர் முன்கூட்டியே அறிவிப்பார்என்றும், நாளொன்றில் மாகாணத்தில் உள்ள ஒரு உள்ளூராட்சி சபையொன்றுக்கு மட்டுமேநியமனத்தைமேற்கொள்ள முடியும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# இலங்கைத் தமிழ அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேசசபை தெரிவு

இலங்கை தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இன்றைய தினம் சத்தியபிரமாணம் செய்து கொண்டனர்.

கட்சியின் கிளிநொச்சி அலுவலகமான அறிவகத்தில் குறித்த சத்தியபிரமாணம் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெற்றது. ஓய்வு நிலை அதிபர் நாகலிங்கம் சோதிநாதன் ,மாவட்ட பிரஜைகள் குழு தலைவர் கிருஸ்ணபிள்ளை சின்னராசா, முன்னாள் வடமாகாண கல்வியமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா ஆகியோர் முன்னிலையில் தமது சத்தியபிரமாணத்தை செய்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய சிறீதரன் -

இலங்கைதமிழரசுக்கட்சிகிளிநொச்சிமாவட்டத்தில் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேசசபைகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையும் திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச சபையும்,மட்டக்களப்பு இரண்டு சபைகளுமாக மொத்தம் ஆறு பிரதேச சபைகளில் சுகந்திரமாக எந்தவித இடையூறுகளும் இன்றி ஆட்சி அமைக்கவுள்ளோம்.

அதே நேரம் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் ஆட்சியமைப்பதற்கு ஓர் ஆசனம் போதாது உள்ள நிலையில் அந்த ஓர் ஆசனம் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸிடம் உள்ளது.

அந்த ஆசனத்தை கொள்கை ரீதியாக ஆதரவு வழங்க இனங்கி இருக்கிறார். நெடுந்தீவிலும் இவ்வாறு இனங்கியுள்ளனர். ஊர்காவற்துறை பிரதேச சபையில் தமிழ்க்காங்கிரஸ் ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளோம். 316







உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# யாழ் . மாநகர சபையின் முதல் முஸ்லீம் பெண் பிரதிநிதி தெரிவு

(பாறுக் ஷிஹான்)

யாழ் மாநகர சபைக்கான முதல் முஸ்லீம் பெண் பிரதிநிதியாக பாத்திமா றிஸ்லா என்ற ஆசிரியை நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபையில் தனக்குக் கிடைத்த 3 (போனஸ்) பிரதிநிதிகளில் ஒன்றை, யாழ் முஸ்லிம் சமூகம் சார்பில், றிபைன் பாத்திமா றிஸ்லாக்கு தமிழரசு கட்சி வழங்கியுள்ளது. 2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் பற்றிய விசேட வர்த்தமானி 31 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

குறித்த அறிவித்தல் மூலம் நியமனம் உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். மாநகர சபையில் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் றிஸ்லா வேட்பாளராக களமிறங்கியிருந்தார்.

யாழ் மாநகரசபைத் தேர்தலில் பட்டியல் வேட்பாளராக இடம்பெற்ற சகோதரி பாத்திமா றிஸ்லா ஆசிரியை அவர்களை இலங்கை தமிழ் அரசுக் கட்சி தமது நியமன உறுப்பினராக நியமித்துள்ளது.

இந்த நியமனத்தை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி யாழ் மாநகரசபையின் முதல் பெண் பிரதிநிதியாக ஆசிரியை பாத்திமா றிஸ்லா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ் மாநகரசபைக்கான முதல் பெண் பிரதிநிதியாக சகோதரி பாத்திமா றிஸ்லா ஆசிரியை நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத்தேர்தலில் யாழ் மாநகர சபைத்தேர்தலில் பட்டியல் வேட்பாளராக இடம்பெற்ற சகோதரி பாத்திமா றிஸ்லா ஆசிரியை அவர்களை இலங்கை தமிழரசுக்கட்சி தமது நியமன உறுப்பினராக நியமித்துள்ளது.

இந்நியமனத்தை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இந்நியமனத்தை உறுதி செய்த கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், யாழ்ப்பாணக்கிளைத்தொகுதி தலைவர் சிறில் மற்றும் செயலாளர் ஆர்னோல்ட் ஆகியோருக்கும் யாழ் முஸ்லிம் மக்கள் சார்பாக நாம் நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற இச்சூழ்நிலையில் தமிழ் மக்களுடனான நல்லிணக்கச் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் வலுவாக அமைந்திருக்கின்றன என்பதற்கு மேற்படி நியமனம் முன்னுதாரணமாகவும் எடுத்துக்காட்டாகவும் சாட்சியமாகவும் அமைந்திருக்கின்றது.

யாழ்ப்பாணம் 13 ஆம் வட்டாரத்தில் மக்களால் தேர்வு செய்யப்பட சகோதரர் அப்துல்லாஹ், ஒப்பந்த அடிப்படையில் அவரோடு இணைந்து போட்டியிட்ட சகோதரர் முஹம்மது இர்பான் மற்றும் பாத்திமா றிஸ்லா ஆகியோர் யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம், சமூக நல்லிணக்கம் சார்ந்த விவகாரங்களில் இலங்கை தமிழரசுக்கட்சியை பிரதிநிதித்துவம் செய்து முற்போக்காகச் செயற்படுவார்கள் என யாழ் முஸ்லிம் மக்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

நியமனம் பெற்றுள்ள சகோதரிக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மீன் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.06.2025இல் வெளியிடப்பெற்றது